**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

OS 23/2021

07.04.2026.

**DW - 1**

**பி.வா.சா.1. உமாமகேஷ்வரி க/பெ. மணிவண்ணன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

வழக்கு சொத்து முழுவதும் எனது கணவர் மணிவண்ணனுக்கு சொந்தம் என்பது எனது கட்சி என்றால் - சரிதான். 01.10.2015, 26.092016 தேதியிட்ட கிரய பத்திரங்கள் மூலமாக உரிமையுடையது என்றால் - சரிதான். கிரய பத்திரங்களுக்கு பிறகு எனது கணவர் அனுபவத்தில் தாவா சொத்து இருந்ததா என்றால் - கிரயம் பத்திரத்திற்கு பிறகு தான் வந்தது. 2016 க்கு பிறகு எனது கணவர் பட்டா மாற்றம் செய்துகொண்டாரா என்றால் - எனக்கு தெரியாது. 2016 க்கு முன்பு தாவா சொத்து யாருக்கு சொந்தம் என்றால் - முத்தையா முதலியாருக்கு சொந்தமானது. முத்தையா முதலியார் உறவினர் அல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.